முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 17.11.2025

O.S. No. 75/2023

வா.சா.1 மோகன்

4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கின் இடைக்கால மனு எண்.2/2023 ன் நீதிமன்ற ஆணையர் நியமணம் கோரி நான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரி. நீதிமன்ற ஆணையர் பட்டிகைச் சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தார் என்றால் சரி. தற்போது என்னிடம் காட்டப்படும் அறிக்கை மற்றும் வரைபடம் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்தது என்றால் சரி. அது நீ.ம.சா.ஆ 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் எந்தவித ஆட்சேபனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் என்னுடைய 1/6 செண்ட் நிலத்தை பால்நாடாரின் வாரிசுகள் ஆக்கிரமிப்பு செய்ததால் பாதை அவகாசம் கோரியும் பாக ஆவண எண் 4238 /1120 பத்திரப்படி உள்ள பாதையை அடைத்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

நான் நீதிமன்ற ஆணையர் பட்டிகைச் சொத்தை பார்வையிட்டபோது ஆவண எண்.4238/1120 ஆவணத்தின் படி அளக்கும் படி குறிப்பாணை தந்தேன் என்றால் சரி. மேற்படி ஆவணத்தின்படி இடத்தை அளந்தார் என்றால் அளந்தார். மேற்படி பாக ஆவணத்தை எனது பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லி அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை.

மேற்படி ஆவணத்தை கொடுத்து அளப்பதற்கு என்ன காரணம் என்றால் பால்நாடார்

மேற்படி ஆவணத்தின் படி தான் அவருடைய பூமி அவருக்கு கிடைத்ததாக கூறிகிறார். மேற்படி பால்நாடார் இந்த வழக்கில் கட்சி இல்லை என்றால் சரி. வா.சா.ஆ.1 நான் தாக்கல் செய்த மாதிரி வரைபடம் என்றால் சரி. அதை யார் தயார் செய்தது என்றால் வரைபட நிபுணர் தயார் செய்தார். வரைபட நிபுணர் தயார் செய்ததாக வா.சா.ஆ.1 ல் எந்த குறிப்பும் இல்லை என்றால் சரி. வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள 1 முதல் 4 கண்டங்கள் எதன் அடிப்படையில் அளவுகள் குறிக்கப்பட்டுள்ளது என்றால் 2001 ல் தங்கரத்தினம் பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. அது வா.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்துள்ளேன்.

வா.சா.ஆ. 11 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகள் சரியானவை என்றால் சரி. வா.சா.ஆ.11 ஆவணம் சட்டப்படி சரியான செல்லுபடியாகும் ஆவணம்தானா என்றால் சரியல்ல. நான் அதில் கையொப்பமும் கைரேகையும் வைக்கவில்லை. மேற்படி ஆவணம் செல்லாத ஆவணம் என்று காவல்நிலையத்தில் நான் அளித்த புகாருக்கான ஆவணம் வா.சா.ஆ.12 என்றால் சரி. வா.சா.ஆ 11 ஆவணத்தை எனது தாயாரும் , சகோதரியும் எழுதினார் என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ. 12 புகாரில் யார் எழுதித்தந்ததாக கூறி காவல்நிலையத்தில் புகார் செய்யப்பட்டது என்றால் ஒன்று பால்நாடார், 2. தங்கரத்தினம் ஆகியோர்கள் ஆகும். வா.சா.ஆ.11 ல் எழுதித் தந்தவர் என்று இடத்தில் பால்நாடார் பெயர் உள்ளதா என்றால் இல்லை. அவர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்.

வா.சா.ஆ.11 ஐ யார் எழுதித்தந்தது என்றால் எனக்குத் தெரியாது . வா.சா.ஆ.11 ஆவணத்தை படித்து சொல்லச் சொன்னால் சாட்சி ஆவணத்தை வாங்க மறுத்து தெரியாது என்று கூறுகிறார். ஆணையர் பட்டிகைச் சொத்தை பார்வையிடும்போது பால்நாடாருக்கு பாத்தியப்பட்ட ஆவண எண்.1223/1987 ஆவணத்தின் படியும் அளந்து அறிக்கை தாக்கல்

செய்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய மாதிரி வரைபடத்தில் தென் மேற்காக காட்டப்பட்ட சொத்தானது பி பட்டிகைச் சொத்து என்றால் சரிதான்.

ஆணையர் வரைபடத்தில் பி பட்டிகைச் சொத்தை பால்நாடார் சொத்தாக காட்டியுள்ளார் என்றால் சரி. என் பிராதில் அ பரிகாரமாக மேற்படி பி பட்டிகைச் சொத்தை தான் சொத்து மீட்பு பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி பட்டிகைச் சொத்தில் தென் மேற்கில் உள்ள சுவரை அகற்றகோரிதான் 2 வது பரிகாரமாக வழக்கில் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். பி பட்டிகைச் சொத்தில் எந்த அழிமதியும் செய்யக்கூடாது என்று 3 வது பரிகாரமாக வழக்கில் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை படித்துப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி எதிர்வழக்குரையுடன் பால்நாடாரின் 19.10.1987 ல் கிரயம் பெற்ற 1223/87 ஆவணத்தின் சார்பதிவக நகலை தாக்கல் செய்துள்ளார் என்றால் செய்துள்ளார்.

பால்நாடார் மேற்படி நிலத்தை அடமானமாக வைத்ததற்கு ஆவணத்தையும் பிரதிவாதி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 1987 ஆவணம் பால்நாடாரின் ஆவணத்தை செல்லாத ஆவணம் என்று பரிகாரம் கோரி வழக்கல் தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு ஆவணம் இருப்பதே தெரியாது அதனால் நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. 1987 ஆவணத்தைப் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் 01.01.2022 ல் தெரிய வந்தது. அந்த தேதியிலிருந்து தற்போது வரை வழக்குத் தாக்கல் செய்து நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுக்கவில்லை. நான் சன் பாலிடெக்னிக் கல்லூரியில் ஆய்வக உதவியாளராக வேலைப் பார்த்தேன். அந்த வேலையின்போது என் அப்பா பெயர் என்னவாக கொடுத்திருந்தேன் என்றால் எனக்குத் தெரியாது சர்வீஸ் ரெஜிஸ்டரைப் பார்த்தால் தான் தெரியும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் அப்பா பெயர் என்னவாக குறிப்பிட்டுள்ளது என்றால்

கணேசன் ஆகும். சாட்சி தற்போது இரண்டு ஆவணத்திலும்ள கணபதி அப்பா பெயராக குறிப்பிடப்பட்டதாக கூறுகிறார். எனது நிரூபணவாக்குமூலத்தில் அப்பா பெயர் கணேசன் என்று போட்டுள்ளேன் என்றால் சரி. அதனால் கிரய ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள கணபதி என்ற பெயர் தவறு என்றால் சரியல்ல. என்னைப் பெற்றவர் பெயர் கணபதி என்னை வளர்த்தவர் பெயர் கணேசன்.

கணேசன் என்பவர் என்னை தத்து எடுத்ததாக நான் சொல்வதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பதிவு செய்த தத்து ஆவணம் ஒன்று உள்ளது. 1990 ம் ஆண்டில் இராஜக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தயார் செய்த ஆவணத்தில் எனக்கு பயோலிஜிக்கல் பெற்றோர் தத்து பெற்றோருக்கு கொடுத்த விவரமும் மேற்படி 2 பெற்றோர்களின் விவரமும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.